**தமிழ்நாடு பள்ளி கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6**

**ந.க.எண் 46226/அ1/இ4/2018 நாள் 25 .01.2019**

பொருள்: பள்ளிக் கல்வி -ஜாக்டோ ஜியோ -தமிழ்நாடு ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு - வேலை நிறுத்தப் போராட்டம் - இணை இயக்குநர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களை ஆய்வு மேற்கொண்டு – அரசுக்கு அறிக்கை அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை: அரசு கடித எண் 1684/தொ.க.3(1)/2019 நாள் 24.01.2019.

*******

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் காணொலி காட்சி மூலம் தமிழக அரசு முதன்மைச்செயலாளரால் கீழ்க்கண்டுள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1. நாளை 26.01.2019 அனைத்து தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கட்டாயம் குடியரசு தினவிழாவில் கலந்துக்கொள்ள வேண்டும். கலந்துக்கொள்ளாத ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
2. பணிக்கு வருகைபுரியாத தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு "No Work No Pay" என்ற அடிப்படையில் ஊதியம் பெற்றளிக்கப்படக்கூடாது.
3. வேலை நிறுத்த போராட்டத்தில் பங்குபெற்ற தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பள்ளியில் சேர்வதை அனுமதிக்கலாம்.
4. 26.01.2019 வரை வருகை புரியாத ஆசிரியர்களின் பெயர்பட்டியலை தயார் செய்து, அப்பணியிடங்கள் "காலிப்பணியிடங்கள்" எனக்கருதி தகுதியுள்ள வேலையில்லா நபர்கள்/ ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உடனடியாக நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்படும். ஆசிரியர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.10,000/– வழங்கப்படும்.
5. அனைத்து மாணவர்களும் பள்ளிக்கு வருகை புரிவதையும், பள்ளிகள் முறையாக நடைபெறுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

இணைப்பில் கண்டுள்ள பட்டியலில் இடம்பெற்றுள்ள இணை இயக்குநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு 27.01.2019 முதல் நேரில் சென்று பள்ளிகள் செயல்படுகிறதா என்பதை கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்

மாவட்டங்களுக்கு செல்லும் இணை இயக்குநர்கள் மேற்காணும் பணிகள் முடிவடையும் வரை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் தங்கியிருந்து மேற்காணும் பணிகள் செவ்வனே நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: பட்டியல்

26/1/19

பள்ளிக்கல்வி இயக்குநர்

26/1/19

பெறுநர்

சார்ந்த இணை இயக்குநர்கள்

நகல்: 1. அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வி த்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 6– -தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

2. கூடுதல் திட்ட இயக்குநர்,
மாநில திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
சென்னை – 6 –பணிந்தனுப்பப்படுகிறது

3. தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம்,சென்னை – 6-
பணிந்தனுப்பப்படுகிறது.

4. இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம்,சென்னை – 6

5. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

6. இயக்குநர், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை – 6

7. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 6

8. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்,
சென்னை – 6

9.அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

10.அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்